TNTS080002412015

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 12 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்.368/2015**

1. தவசி
2. மாரிமுத்து
3. முருகேஷ் ....வாதிகள்

/எதிர்/

1. முருகன்
2. முத்துக்குமார்
3. வேலு
4. சரவணன் ....பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 28.03.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ஆனந்த் அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.புஷ்பராஜ் அவர்கள் ஆஜராகியும், 2 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் 2 மற்றும் 4 பிரதிவாதிகள் 27.01.2016 ம் தேதி இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரை, 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை, வாதிகள் மற்றும் 1 மற்றும் 3 பிரதிவாதிகள்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:10:45 +0530

தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் இருதரப்பு வாத உரைகள் ஆகியவைகளை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

வாதிகளால் இவ்வழக்கானது, பிராது 1, 2 தபசில் சொத்துக்களில் 1, 2 வாதிகளுக்கு 1/5 பங்கும், 3ம் வாதிக்கு 1/5 பங்கும் உள்ளது என விளம்புகை செய்யக்கோரியும், இந்த 1, 2 தபசில் சொத்துக்களை அமைதியான முறையில் உபயவாதிகளுடன் அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ, வேலையாட்களோ, முகவர்களோ, வாரிசுகளோ வாதிகள் மின் மோட்டாரை பயன்படுத்தி, தண்ணீர் பாய்ச்சி விவசாயம் செய்து வருவதற்கு யாதொரு வகையிலும், எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்க வேண்டியும், பிராது 3ம் தபசில் சொத்தில் இந்த பிரதிவாதிகள் ஏற்படுத்தியுள்ள ஆழ்துளைக்கிணற்றை இந்நீதிமன்றம் குறிப்பிடும் ஒரு தினத்திற்குள் இந்த பிரதிவாதிகள் செலவில் இந்த பிரதிவாதிகளே அகற்றி கொடுக்கும்படி ஏவுகட்டளை உத்தரவிடக்கோரியும், பிராது 1ம் தபசில் 2ம் அயிட்ட சொத்தில் வாதிகளுக்கு இருந்துவரும் 2/5 பங்கைப் பொறுத்து 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தி கொடுத்துள்ள 26.05.2014 தேதிய மேலநீலிதநல்லூர் சார்பதிவாளர் அலுவலக பதிவு ஏற்பாடு ஆவண எண்.1066/2014 மற்றும் 3ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தி கொடுத்துள்ள 26.05.2014 தேதிய மேலநீலிதநல்லூர் சார்பதிவாளர் அலுவலக பதிவு ஏற்பாடு ஆவண எண். 1065/2014 ஆகியவை சட்டப்படி செல்லாது என விளம்புகை செய்து உத்தரவிடக்கோரியும் மற்றும் வழக்கின் செலவுத் தொகை கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:10:52 +0530

**1) <u>வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையின் சுருக்கம்</u> :**

பிராது தபசில் சொத்தும், வேறுபல சொத்துக்களும் ஆதியில் சூரங்குடியை சேர்ந்த பெரியான் என்ற பெரியசாமி என்பவருக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டு, அவரது பெயருக்கு பட்டா ஏற்பட்டு தீர்வை செலுத்தி ஆண்டு அனுபவம் செய்து வந்தார் என்றும், மேற்படி பெரியான் (எ) பெரியசாமி தனது மனைவி கருப்பாயம்மாள் மற்றும் மக்களான சங்கரன், கருப்பாயம்மாள், ராக்கம்மாள், முத்து என்ற சப்பாணிமுத்து, சண்முகம், முருகன் மற்றும் வேலு ஆகியோர்களை தனது அடுத்த வாரிசுகளாக விட்டுவிட்டு கடந்த சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் இறந்துவிட்டார் என்றும், அடுத்ததாக, பெரியான் (எ) பெரியசாமியின் குமாரர்களில் ஒருவரான சங்கரன் வாரிசாக தனது தாயார் கருப்பாயம்மாள், மனைவி பேச்சியம்மாள், மகள் மாரியம்மாள் மற்றும் 1, 2 வாதிகளையும் தனது அடுத்த வாரிசாக விட்டுவிட்டு கடந்த 23.03.1983 ல் இறந்துவிட்டார் என்றும், பிராது தபசில் சொத்துக்களும் வேறுபல சொத்துக்களும் மேற்படி பெரியான் (எ) பெரியசாமி என்பவரின் வாரிசுகளின் கூட்டு அனுபவத்தில் இருந்து வந்தது என்றும், இதில் பெண் வாரிசுகளான மேற்படி கருப்பாயம்மாளுக்கு பெரியான் (எ) பெரியசாமி தான் உயிருடன் இருக்கும் காலத்திலேயே சின்னக்கோவிலான்குளம் கிராமம் சர்வே எண்.9 ல் 72 செண்ட் இடமும், சீர்வரிசைகளும் கொடுத்து திருமணம் செய்து கொடுத்துவிட்டார் என்றும், அதேபேல மற்றொரு பெண் வாரிசான ராக்கம்மாளுக்கு நல்லமுறையில் சீர்சீராட்டுக்களுடன் திருமணம் செய்து வைத்துவிட்டார் என்றும், அதனால், மேற்படி கருப்பாயம்மாள் மற்றும் ராக்கம்மாள் இருவரும் பெரியான் (எ) பெரியசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் இருந்துவந்த தங்களின் பாகத்தை சகோதரர்களான முத்து (எ) சப்பாணிமுத்து, சண்முகம், முருகன், வேலு மற்றும் சங்கரன் ஆகியோர்களுக்கு வாய்மொழியாக விட்டுக்கொடுத்து விட்டனர் என்றும், பெரியான் (எ) பெரியசாமி இறந்த சில காலங்களிலேயே அவரது மனைவி மேற்படி கருப்பாயம்மாள் 2013 ல் இறந்துபோனார் என்றும், பின்னர்,

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:10:58 +0530

பெரியான் (எ) பெரியசாமியின் மனைவி கருப்பாயம்மாள் குடும்ப சொத்துக்களில் இருந்து வந்த தனது பாகத்தை ஆண்மக்களுக்கு விட்டுக்கொடுத்து, அதுமுதல் 3ம் வாதியின் தகப்பனார் முத்து (எ) சப்பாணிமுத்து, சண்முகம், முருகன், வேலு மற்றும் இறந்துபோன சங்கரனின் வாரிசுகள் ஆகியோர்களுக்கு மேற்படி பெரியான் (எ) பெரியசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் முழுமையாக கிடைக்கப்பெற்று கூட்டாக அனுபவம் செய்து, மேற்படி நபர்கள் தங்களுக்குள் செய்துகொண்ட வாய்மொழி பாகப்பிரிவினை மூலம் தலா 1/5 ஒவ்வொருத்தருக்கும் கிடைக்கப்பெற்று தனித்தனியாக ஆண்டு அனுபவித்து வந்தனர் என்றும், அதில் பிராது தபசில் சொத்துக்கள் மட்டும் பொதுவான அனுபவத்தில் வைத்துக்கொள்ளப்பட்டது என்றும், இதில் பெரியான் மகன் சண்முகம் அவருக்குரிய பாக சொத்துக்களை பொறுத்து 1 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டதாக சமீபத்தில் இந்த வாதிகளுக்கு தெரியவந்தது என்றும், ஆனால், சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் சண்முகம் இறந்துபோனார் என்றும், மேற்படி முத்து (எ) சப்பாணிமுத்து தனக்கு வாய்மொழி பாகத்தில் கிடைக்கப்பெற்ற தபசில் சொத்துக்களையும், வேறு பல சொத்துக்களையும் பொறுத்து 30.08.2004ம் தேதிய மேலநீலிதநல்லூர் சார்பதிவாளர் அலுவலக 865/2004 நம்பர் ஏற்பாட்டு ஆவணம் மூலம் தனது ஒரே ஆண்மகனான இந்த 3ம் வாதி பெயருக்கு ஒரு பதிவு ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டார் என்றும், அவ்வாறு இந்த 3ம் வாதி பெயருக்கு மேற்படி பதிவு ஏற்பாடு ஆவணம் எழுதியபோது பிராது தபசில் சொத்தில் 1/4 பங்கு என்று தவறுதலாக எழுதிக்கொடுத்து விட்டார் என்றும், மேற்படி ஏற்பாடு ஆவணத்தில் தபசில் சொத்தில் தவறுதலாக 1/4 பங்கு என எழுதப்பட்ட விபரம் பின்னர் தெரியவரவே மேற்படி முத்து (எ) சப்பாணிமுத்து மேலநீலிதநல்லூர் சார்பதிவாளர் அலுவலக 28.09.2015ம் தேதிய 1922/2015 நம்பர் சீர்திருத்த ஆவணம் மூலம் தபசில் சொத்துக்களில் 1/5 பங்கு என சரியாக காண்பித்து 3ம் வாதிக்கு சீர்திருத்தம் செய்துகொடுத்துள்ளார் என்றும், 30.08.2004ம் தேதிய பதிவு ஏற்பாடு

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:11:06 +0530

ஆவணம் மூலம் தபசில் சொத்துக்களில் 1/5 பங்கு 3ம்வாதிக்கு கிடைக்கப்பெற்று வருவாய்துறையில் பட்டா ஏற்பட்டு தீர்வை முதலியன செலுத்தி அமைதியாக ஆண்டனுபவித்து வருகிறார் என்றும், அவ்வாறு பிராது 1ம் தபசில் சொத்துக்களை 3ம் வாதிக்கு ஏற்பாடு ஆவணம் பிறப்பித்து கொடுத்த 30.08.2004ம் தேதிய காலகட்டத்தில் மின் இணைப்பு ஏற்படுத்தப்படாததால் மேற்படி ஏற்பாடு ஆவணத்தில் மின் இணைப்பு, மின்மோட்டார் விபரம் குறிப்பிடப்படவில்லை என்றும், மேற்படி சங்கரனின் மகள் மேற்படி மாரியம்மாளுக்கு தேவையான சீர்சீராட்டுக்கள் செய்துகொடுத்து நல்லமுறையில் 1, 2 வாதிகளே திருமணம் செய்து வந்தனர் என்றும், இறந்துபோன மேற்படி சங்கரனின் வாரிசுகளுக்குள் 2010ல் நடந்த வாய்மொழி பாகப்பிரிவினையில் சங்கரன் மனைவி பேச்சியம்மாள் மற்றும் மகள் மாரியம்மாள் ஆகியோர்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பிராது தபசில் சொத்துக்களிலும், வேறுபல சொத்துக்களிலும் இருந்து வந்த தங்களது பாகத்தை 1, 2 வாதிகளுக்கு வாய்மொழியாக விட்டுக்கொடுத்து, சங்கரன் பாகமான 1/5 பங்கு 1, 2 வாதிகளுக்கு முழுமையாக கிடைக்கப்பெற்று பிராது தபசில் சொத்துக்களை உபயவாதிகளுடன் கூட்டாக அனுபவித்து வருகின்றனர் என்றும், பிராது 1ம் தபசில் சொத்தில் உள்ள 1ம் அயிட்ட கிணற்றுக்கு மேற்படி பெரியான் (எ) பெரியசாமி உயிருடன் இருக்கும்போதே தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இலவச மின் இணைப்பு வேண்டி மனு செய்திருந்தார் என்றும், அவரது இறப்பிற்கு பின்னர் முன்னுரிமைப்படி பிராது 1ம் தபசில் 1ம் அயிட்ட கிணற்றிற்கு வந்த மின் இணைப்பானது கூட்டுரிமையாளர்களான 3ம் வாதி சார்பாக அவரது தந்தை முத்து (எ) சப்பாணிமுத்து, சண்முகம், வேலு மற்றும் 1, 2 வாதிகள் ஆகியோர்களின் சம்மதக்கடிதத்தின் பேரில் 1ம் பிரதிவாதி பெயரில் மனு கொடுக்கப்பட்டு 916 என்ற எண்ணில் இலவச மின் இணைப்பு பொதுவாக பெறப்பட்டு 2ம் அயிட்ட மோட்டார் பம்பு செட்டை பொதுவாக வாங்கி நாளது தேதிவரையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும், அதில் இந்த 1, 2 வாதிகள்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:11:13 +0530

இருவரும் சேர்ந்து 1/5 பங்கும், 3ம் வாதிக்கு 1/5 பங்கும், 1, 3 பிரதிவாதிகளுக்கு தலா ஐந்தில் 1 1/2 பங்கும் சித்தித்துள்ளது என்றும், பிராது 1ம் தபசில் சொத்துக்கு 3ம் வாதி பெயரில் பட்டா எண்.1001 என ஏற்பட்டுள்ளது என்றும், பிராது 2ம் தபசில் சொத்து கிணற்றுக்கு பெரியான் (எ) பெரியசாமி உயிருடன் இருக்கும்போதே மின் இணைப்பு பெற்று மோட்டார் பம்பு செட்டுக்கள் பொறுத்தப்பட்டு, பொதுவாக 1, 2 வாதிகள் இருவரும் சேர்ந்து 1/5 பங்கும், 3ம் வாதிக்கு 1/5 பங்கும், 1, 3 பிரதிவாதிகளுக்கு தலா ஐந்தில் 1 1/2 பங்கும் சித்தித்து நாளது தேதிவரையில் பொதுவாக அனுபவித்து வரப்படுகிறது என்றும், பிராது 2ம் தபசில் சொத்துக்கு உபயவாதிகள் பெயரில் கூட்டாக பட்டா எண்.856 என இருந்து வருகிறது என்றும், பிராது 3ம் தபசில் சொத்தானது உபயமனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட பிராது 1, 2 தபசில் கிணறுகளில் இருந்து தூர்வாறும்போதும், மராமத்து செய்து கிணறு ஆழப்படுத்தும்போதும் அள்ளப்பட்ட சரளை மண், கல் முதலானவற்றை கொட்டி வைப்பதற்காகவும், பொதுவான பயன்பாட்டிற்காகவும் ஒதுக்கப்பட்டு பொதுவாக அனுபவித்து வரப்படுகிறது என்றும், அவ்வாறு பொதுவான அனுபவத்திலுள்ள பிராது 3ம் தபசில் சொத்தில் பிரதிவாதிகள் வாதிகளின் சம்மதமின்றி எந்தவொரு அனுமதியும் பெறாமல் 2014 ஏப்ரல் மாதம் தொடக்கத்தில் ஆழ்துளைக்கிணறு (போர்வெல்) அமைக்க 1, 3 பிரதிவாதிகள் முயற்சித்தபோது, பிரிவினை செய்யப்படாமல் பொதுவில் இருந்து வரும் 3ம் தபசில் சொத்தில் ஆழ்துளைக்கிணறு தோண்டக்கூடாது என வாதிகள் கடும்ஆட்சேபணை செய்தனர் என்றும், அப்போது வாதிகளை வயலுக்கு வரும்போது கொன்றுவிடுவோம் என மிரட்டி வாதிகளுக்கு உயிர்பயம் ஏற்படுத்தி பிரதிவாதிகள் ஆழ்துளைக்கிணறு ஏற்படுத்திவிட்டனர் என்றும், இது சம்பந்தமாக வாதிகள் சின்னக்கோவிலான்குளம் காவல்நிலையத்தில் புகார் செய்தும் எவ்வித பலனும் இல்லை என்றும், பிராது 3ம் தபசில் ஆழ்துளைக்கிணற்றுக்கு பிராது 1ம் தபசில் 2ம் அயிட்ட சொத்திலுள்ள மின் இணைப்பை சட்டத்திற்கு புறம்பாக இந்த பிரதிவாதிகள் பயன்படுத்தியதை

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:11:19 +0530

அறிந்த 3ம் வாதி சமுதாய பெரியவர்களை வைத்து கண்டித்தும் 1ம் பிரதிவாதி கேட்காததால், தமிழ்நாடு மின்சார வாரியம் கண்காணிப்பு பொறியாளர், திருநெல்வேலி அவர்களுக்கு 1, 3ம் பிரதிவாதிகள் மீது 25.05.2015ல் புகார் அனுப்பினார் என்றும், அப்புகாரின் பேரில் விசாரணை செய்து 1ம் பிரதிவாதிக்கு அபராதம் விதித்துள்ளனர் என்றும், அதுமுதல் வாதிகள் மீது பிரதிவாதிகள் மிகுந்த பகைமையுடன் செயல்பட்டு தபசில் சொத்துக்களில் வாதிகளின் அனுபவத்திற்கு பல்வேறு வகைகளில் இடையூறு செய்து வருகின்றனர் என்றும், இந்நிலையில் 1, 2 வாதிகள் மற்றும் 3ம் வாதி 1ம் தபசில் சொத்தில் உள்ள மின் மோட்டாரை பயன்படுத்தி 21.06.2015ல் தண்ணீர் பாய்ச்சியபோது பிரதிவாதிகள் மின்மோட்டாரை நிறுத்தி "இனிமேல் இந்த மோட்டாரில் தண்ணீர் பாய்ச்சக்கூடாது. மீறி தண்ணீர் பாய்ச்சினால் உங்களை உயிரோடு விடமாட்டோம்" என்று மிரட்டியுள்ளனர் என்றும், இதன் தபசில் சொத்துக்களில் 1, 3 பிரதிவாதிகளுக்கு எவ்வித தனித்த உரிமையோ, அனுபவமோ எக்காலத்திலும் இருந்தது கிடையாது என்றும், இந்த நிலைமையில் இதன் தபசில் சொத்துக்களை பொறுத்து 1, 3 பிரதிவாதிகள் 2, 4 பிரதிவாதிகளுக்கு ஏதோ ஆவணம் பிறப்பித்துக் கொடுத்துள்ளதாக 10.10.2015ல் ஊரில் பிரஸ்தாபித்து வந்த விபரம் வாதிகள் அறிந்ததால் 1ம் வாதி மூலம் பிராது தபசில் சொத்துக்களுக்கு மேலநீலிதநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 15.10.2015ம் தேதி வில்லங்கசான்றும், நகலும் எடுத்து பார்த்ததில் 1ம் பிரதிவாதி 26.05.2014 தேதிய மேலநீலிதநல்லூர் சார்பதிவாளர் அலுவலகம் 1066/2014 நம்பர் பதிவு ஏற்பாடு ஆவணம் உற்பத்தி செய்து 2ம் பிரதிவாதிக்கும், 3ம் பிரதிவாதி 26.05.2014 தேதிய மேலநீலிதநல்லூர் சார்பதிவாளர் அலுவலகம் 1065/2014 நம்பர் பதிவு ஏற்பாடு ஆவணம் 4ம் பிரதிவாதிக்குமாக பிராது 1ம் தபசில் 2ம் அயிட்டம் மற்றும் 3ம் தபசில் சொத்துக்களில் வாதிகளுக்குரிய 2/5 பங்கு உரிமையை மறைத்து மோசடியாக எழுதிக்கொடுத்துள்ள விபரம் வாதிகளுக்கு தெரியவந்தது என்றும், பிரதிவாதிகளின் மேற்படி மோசடி ஆவணங்களை ரத்து

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:11:25 +0530

செய்யுமாறு வாதிகள் பிரதிவாதிகளிடம் நேரிலும், பெரியோர்களை வைத்துக்கேட்டும் பிரதிவாதிகள் மேற்படி மோசடி ஏற்பாடு ஆவணங்களை ரத்து செய்ய மறுத்து வருவதோடு மட்டுமல்லாது, தபசில் சொத்துக்களை வாதிகள் அமைதியாக அனுபவித்து வருவதில் இடையூறு ஏற்படுத்தியும் வருகின்றனர் என்றும், எனவே, பிரதிவாதிகள் ஏற்படுத்தியுள்ள மோசடி ஏற்பாடு ஆவணங்களுக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கை எடுக்கும் தங்களது உரிமையை வாதிகள் தக்க வைத்துக்கொள்கிறார்கள் என்றும், பிராது தபசில் சொத்துக்களில் எந்தவித தனித்த உரிமையோ, அனுபவமோ இல்லாத 1, 3 பிரதிவாதிகள் 1ம் தபசில் 2ம் அயிட்ட சொத்திலும், 3ம் தபசில் சொத்திலும் வாதிகளுக்குரிய பங்குரிமையை மறைத்து மோசடியாக 2, 4 பிரதிவாதிகளுக்கு மேற்படி ஏற்பாடு ஆவணங்கள் உற்பத்தி செய்து கொடுத்துள்ளனர் என்றும், மேற்படி 2, 4 பிரதிவாதிகள் பெயரில் 1, 3 பிரதிவாதிகள் மோசடியாக பிறப்பித்துக் கொடுத்துள்ள மேற்படி மோசடி பதிவு ஏற்பாடு ஆவணங்கள் சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றும், மேற்படி மோசடி பதிவு ஏற்பாடு ஆவணங்கள் எக்காலத்திலும் ஊர்ஜிதத்திற்கு வந்ததில்லை என்றும், மேற்படி மோசடி பதிவு ஏற்பாடு ஆவணங்களின் மூலம் 2, 4 பிரதிவாதிகளுக்கு எந்தவிதமான உரிமையும் சித்திக்கக்கூடியதில்லை என்றும், மேற்படி மோசடி ஏற்பாடு ஆவணங்கள் இதன் தபசில் சொத்துக்களில் உள்ள 1, 2 வாதிகள் இருவருக்கும் சேர்ந்து இருந்துவரும் ஐந்தில் ஒரு பங்கு உரிமையும் 3ம் வாதிக்குரிய ஐந்தில் ஒரு பங்கு உரிமையையும் பொறுத்து சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றும், எனவே, பிராது 1, 2 தபசில் சொத்துக்களில் உள்ள கிணற்றையும், அதில் உள்ள மின் மோட்டார் பம்பு செட்களையும் 1, 2 மற்றும் 3ம் வாதிகள் அமைதியான முறையில் மின் இணைப்புகளைப் பயன்படுத்தி தண்ணீர் பாய்ச்சி விவசாயம் செய்து அனுபவித்து வருவதை பிரதிவாதிகள் இடையூறு செய்தால் வாதிகளுக்கு பேரிழப்பும், சொல்லொண்ணா துயரமும் ஏற்படக்கூடும் என்றும், எனவே, பிராது 1, 2 தபசில் சொத்துக்களில் 1, 2 வாதிகளுக்கு 1/5 பங்கும், 3ம் வாதிக்கு 1/5 பங்கும்

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.06.12 18:11:32 +0530

உள்ளது என விளம்புகை செய்யக்கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்க வேண்டியும், பிராது 3ம் தபசில் சொத்தில் இந்த பிரதிவாதிகள் ஏற்படுத்தியுள்ள ஆழ்துளைக்கிணற்றை இந்நீதிமன்றம் குறிப்பிடும் ஒரு தினத்திற்குள் இந்த பிரதிவாதிகள் செலவில் இந்த பிரதிவாதிகளே அகற்றி கொடுக்கும்படி ஏவுகட்டளை உத்தரவிடக்கோரியும், பிராது 1ம் தபசில் 2ம் அயிட்ட சொத்தில் வாதிகளுக்கு இருந்துவரும் 2/5 பங்கைப் பொறுத்து 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தி கொடுத்துள்ள 26.05.2014 தேதிய மேலநீலிதநல்லூர் சார்பதிவாளர் அலுவலக பதிவு ஏற்பாடு ஆவண எண்.1066/2014 மற்றும் 3ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தி கொடுத்துள்ள 26.05.2014 தேதிய மேலநீலிதநல்லூர் சார்பதிவாளர் அலுவலக பதிவு ஏற்பாடு ஆவண எண். 1065/2014 ஆகியவை சட்டப்படி செல்லாது என விளம்புகை செய்யக்கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>:

வாதிகளின் பிராது சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதில்லை என்றும், பிராதின் தபசில் சொத்துக்களும் வேறு சொத்துக்களும் பெரியான் (எ) பெரியசாமிக்கு 20.03.1978ம் தேதிய பதிவு கிரைய ஆவணம் மூலமும் 18.01.1985ம் தேதிய பதிவு கிரைய ஆவணம் மூலமும் 14.07.1975ம் தேதிய பதிவு கிரைய ஆவணம் மூலமும் பாத்தியப்பட்ட சொத்துக்களாகும் என்றும், பிராதில் 1, 2, 3ம் தபசிலாக காட்டப்பட்டுள்ள புல எண்கள் சர்வே எண்.8, 9 ஆகியவைகளில் சர்வே எண்.8 ஆனது, கடந்த 20.03.1978ம் தேதிய பதிவு கிரைய மூலமும் சர்வே எண்.9 ஆனது கடந்த 18.01.1985ம் தேதிய பதிவு கிரைய ஆவண மூலமும் பெரியானுக்கு பாத்தியப்பட்டது என்றும், அதேபோன்று பிராதில் காட்டாத புல எண்.7 ஆனது கடந்த 14.07.1975ம் தேதிய கிரைய ஆவண மூலமும் பெரியானுக்கு பாத்தியப்பட்டது என்றும், மேற்படி பெரியான் (எ) பெரியசாமிக்கு

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:11:39 +0530

பாத்தியப்பட்ட சர்வே எண்.7 ல் 1 ஏக்கர் 60 செண்ட் இடத்தை இவ்வழக்கில் சேர்த்து போகவில்லை என்றும், இந்த வாதிகள் கூறுவதுபோல் பிராதின் தபசில் சொத்துக்களும் வேறு சில சொத்துக்களும் பெரியான் (எ) பெரியசாமிக்கு பூர்வீகமாகப் பாத்தியப்பட்டது என்பது பொய்யாகும் என்றும், மேற்படி சொத்துக்கள் பெரியான் (எ) பெரியசாமிக்கு பல்வேறு தேதிகளில் பல்வேறு நபர்களிடமிருந்து கிரையம் மூலம் பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றும், இவ்வாறு தபசின் சொத்துக்கள் கிரையம் மூலம் பாத்தியப்பட்டதாக இருக்கும் நிலையில் தபசின் சொத்துக்கள் பூர்வீகமென குறிப்பிட்டிருப்பது முற்றிலும் பொய்யானதாகும் என்றும், பெரியான் (எ) பெரியசாமிக்கும் கருப்பாயியம்மாள் என்ற மனைவியும் மேற்படியார்களுக்கு சங்கரன், கருப்பாயியம்மாள், ராக்கம்மாள், முத்து (எ) சப்பாணிமுத்து, சண்முகம், முருகன் மற்றும் வேலு ஆகியோர்கள் வாரிசுகள் என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது என்றும், இதில் பெரியான் (எ) பெரியசாமி கடந்த 22.06.1990 ல் இறந்துபோனார் என்றும், பெரியானின் மனைவியான கருப்பாயியம்மாள் கடந்த 2013 ம் வருடம் இறந்துபோனார் என்றும், மேற்படி பெரியானின் மகனான சங்கரன் என்பவர் கடந்த 1978 ல் இறந்துபோனார் என்றும், மேற்படி பெரியானின் மகனான சங்கரன் இறப்பு குறித்து பிராதில் குறிப்பிட்டுள்ள விபரம் தவறானது ஆகும் என்றும், அது போல் பெரியானின் பெண் மக்களான முறையே கருப்பாயியம்மாள் மற்றும் ராக்கம்மாள் ஆகியோர்களுக்கு கடந்த 55 மற்றும் 50 வருடங்களுக்கு முன்பே பெரியான் (எ) பெரியசாமி உயிருடன் இருந்த காலத்திலேயே வேண்டிய சீர்சீராட்டுகள் ஆகியவை நல்ல முறையில் செய்து கொடுக்கப்பட்டு திருமணமும் முடிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி சொத்துக்களுக்கு ஈடாக சீர்வரிசைகள் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி பெண் மக்கள் இருவருக்கும் மேற்படி சொத்துக்களில் எவ்வித உரிமையும் அனுபவமும் இல்லை என்றும், மேற்படி பெரியான் (எ) பெரியசாமி உயிருடன் இருந்த காலத்திலேயே அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை கடந்த 1985 ம் வருடம் தனது ஆண் மக்களான

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:11:46 +0530

இறந்துபோன சங்கரனின் வாரிசுகள், முத்து (எ) சப்பாணிமுத்து, முருகன், வேலு, சண்முகம் ஆகியோர்களுக்கு வாய்மொழியாக பாகபிரிவினை செய்து கொடுத்துவிட்டார் என்றும், மேற்படி சொத்துக்களை சங்கரனுக்கு உண்டான பாக சொத்துக்களை அவரது வாரிசுகளும் மற்றும் இதர வாரிசுகளுக்கு கிடைத்த பங்கினை தனித்தனியே பிரித்து நாளது தேதிவரை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், அதன்பின்பு பெரியானின் இறப்பிற்கு பின்பு 03.10.1994 ல் பெரியசாமி ஆண்வாரிசுகளான சப்பாணிமுத்து, முருகன், வேலு, சங்கரன் குமாரர் தவசி ஆகியோர்கள் சர்வே எண்.7/2 ல் ஒரு ஏக்கர் 54 செண்ட் இடத்தை கூட்டாக கிரையம் பெற்று அதையும் அதே வருடத்திலேயே தங்களுக்குள் வாய்மொழியாக பிரித்து தனித்தனியே அனுபவம் செய்து வருகிறார்கள் மேற்படி விபரம் வாதிகளுக்கு நன்கு தெரியும் என்றும், அதேபோன்று பெரியானின் ஆண் வாரிசு சண்முகம் என்பவர் மூன்று திருமணம் செய்து எவ்வித குழந்தை பாக்கியமும் இல்லாமல் மேற்படி சண்முகத்திடமிருந்து மூன்று மனைவிகளும் விவாகரத்து பெற்று வேறு திருமணமும் செய்துகொண்டார்கள் என்றும், இந்நிலையில், சண்முகம் அவருக்கு உண்டான பாக சொத்தினை பொறுத்து 1 ம் பிரதிவாதிக்கும் 3 ம் பிரதிவாதிக்கும் கடந்த 2001 ல் கிரையம் கொடுத்துவிட்டார் என்றும், மேற்படி சொத்துக்களை 1, 3 பிரதிவாதிகள் சர்வசுதந்திர பாத்தியதையுடன் அனுபவம் செய்து வருகின்ற விவரம் வாதிகளுக்கு நன்கு தெரியும் என்றும், மேலும், 1, 3 பிரதிவாதிகளில் தங்களின் மக்களுக்கு அதாவது 1 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதிக்கு தனக்கு பாகம் கிடைத்த சொத்தை ஒரு ஏற்பாடு ஆவணம் பிறப்பித்துக் கொடுத்துவிட்டார் என்றும், அதுபோல் 3 ம் பிரதிவாதி 4 ம் பிரதிவாதிக்கு ஒரு ஏற்பாடு ஆவணம் பிறப்பித்துக் கொடுத்துள்ளார் என்றும், இந்த விபரமும் வாதிகளுக்கு நன்கு தெரியும் என்றும், மேற்படி ஏற்பாடு ஆவணத்தின்படி தங்களுக்கு கிடைத்த சொத்தை 2, 4 பிரதிவாதிகள் தங்களின் தனித்த ஆளுகையில் வைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், அதுபோன்று வாதிகள் பெரியான் (எ) பெரியசாமிக்கு பாத்தியப்பட்ட வேறு

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:11:53 +0530

சொத்துக்களான பெரியகோவிலான்குளம் கிராம சர்வே எண்.142, 144 மற்றும் 126 ஆகிய சொத்துக்களையும் பெரியகோவிலான்குளம் கிராமத்தில் அமைந்துள்ள வீட்டினையும் மற்றும் காலி இடங்கள் ஆகியவற்றைப் பற்றி இவ்வழக்கில் எந்த விபரமும் வாதிகள் தங்கள் பிராதில் கூறிப்போகவில்லை என்றும், இவ்வாறு கூறாததிலிருந்தே வாதிகள் பிராதில் தபசில் சொத்துக்களுக்கு மட்டும் பரிகாரம் கோரியிருப்பது பிரதிவாதிகளை கஷ்ட நஷ்டப்படுத்த வேண்டுமென்ற நோக்கில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்பது இந்நீதிமன்றத்திற்கு நன்கு தெரியும் என்றும், வழக்கில் பிராதில் தபசில் சொத்துக்கள் பெரியான் (எ) பெரியசாமி உயிரோடு இருக்கும் காலத்திலேயே அவரது ஆண்வாரிசுகள் மற்றொரு ஆண் வாரிசான இறந்துபோன சங்கரனின் வாரிசுகளுக்கிடையே கடந்த முப்பது வருடங்களுக்கு முன்பு பாக பிரிவினை செய்து கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் ஒவ்வொருவரும் தங்களின் தனித்த ஆளுகையின் கீழ் அனுபவம் செய்து அதில் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கும் 3ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கும் தங்களின் ஏற்பாடு ஆவணம் செய்து கொடுத்து அவர்களின் அனுபவத்தில் இருந்து வரும் நிலையில் வாதிகள் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக கூறியிருப்பது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், மேலும், வாதிகள் கோரியுள்ள பரிகாரமானது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், தபசில் சொத்துக்களில் எவ்வித கூட்டு அனுபவம் இல்லாத நிலையில் பிரதிவாதிகளின் தனித்த அனுபவத்தில் இருந்து வரும் தபசில் சொத்துக்களில் பிரதிவாதிகளை கஷ்ட, நஷ்டப்படுத்தி அவர்களிடமிருந்து பணம் பறிக்க வேண்டுமென்ற எண்ணத்திலேயே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த வாதிகள் 3ம் தபசில் சொத்தில் இந்த பிரதிவாதிகள் ஏற்படுத்தியுள்ள ஆழ்துளைக்கிணறு கடந்த 2005ம் ஆண்டே ஏற்படுத்தப்பட்டுவிட்டது என்றும், அந்த விபரமும் வாதிகளுக்கு தெரியும் என்றும், மேற்படி ஆழ்துளைக்கிணறு பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் போடப்பட்டுள்ளது என்றும், அதை

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:12:00 +0530

கேள்வி கேட்க வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக்கொடுத்த ஏற்பாடு ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியது என்றும், அதுபோன்று 3ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்த ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியது என்றும், வாதிகள் கோரியுள்ள பரிகாரங்கள் சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றும், வாதிகள் கட்டியுள்ள நீதிமன்ற முத்திரை கட்டணமும் மற்றும் சட்டப்பிரிவுகளும் தவறான ஒன்றாகும் என்றும், வாதிகளின் வழக்கு காலதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், வாதிகளின் வழக்கும் வழக்கு மூலமும் தவறானது என்றும், எனவே, வாதிகள் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இவ்வழக்கின் 2, 4 பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும், இந்நீதிமன்றத்தில் ஆஜராகததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளனர்.

4) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரை, 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இவ்வழக்கின் தீர்வுக்காக **25.10.2016ம்** தேதியில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் இந்நீதிமன்றத்தால் வனையப்பட்டுள்ளன.

1. பிராது 1, 2 தபசில் சொத்துக்களில் 1, 2 வாதிகளுக்கு 1/5 பங்கும், 3ம் வாதிக்கு 1/5 பங்கும் பாத்தியப்பட்டது என்பது சரியா?
2. பிராது தபசில் சொத்துக்களைப் பொறுத்து வாதிகள் கோரும் விளம்புகை பரிகாரமும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?
3. பிராது 3ம் தபசில் சொத்தில் பிரதிவாதிகள் ஏற்படுத்தியுள்ள ஆழ்துளை கிணற்றை பொறுத்து வாதிகள் கோரும்

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.06.12 18:12:07 +0530

வலியுறுத்துக் கட்டளை வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?

4. 26.05.2014 தேதிய மேலநீலிதநல்லூர் சார்பதிவாளர் அலுவலகம் 1066/2014 எண் பதிவு ஏற்பாடு ஆவணம் சட்டப்படி செல்லாது என்பது சரியா? மேற்படி ஆவணத்தை பொறுத்து வாதிகள் கோரும் விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?
5. 26.05.2014 தேதிய மேலநீலிதநல்லூர் சார்பதிவாளர் அலுவலகம் 1065/2014 எண் பதிவு ஏற்பாடு ஆவணம் சட்டப்படி செல்லாது என்பது சரியா? மேற்படி ஆவணத்தை பொறுத்து வாதிகள் கோரும் விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?
6. வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?

5) இவ்வழக்கில் வாதிகள் தரப்பில், 3ம் வாதி வா.சா.1 ஆகவும், முத்து என்பவர் வா.சா.2 ஆகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும், வாதிகள் தரப்பில், வா.சா.1 மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களும், பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தின் மூலமாக வா.சா.ஆ.11 முதல் வா.சா.ஆ.15 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6) மேலும், இவ்வழக்கின் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில், 1ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில், வா.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தின் மூலமாக பி.வா.சா.ஆ.1 ஆவணமும், பி.வா.சா.1 மூலமாக பி.வா.சா.ஆ.2 முதல் பி.வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

7) மேலும், இவ்வழக்கில் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நிர்வாகப் பொறியாளராகப் பணிபுரியும் புபேஷ் ராஜ்மோகன் என்பவர் நீ.ம.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார்.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:12:18 +0530

**8) எழுவினா 1 :**

- பிராது 1, 2 தபசில் சொத்துக்களில் 1, 2 வாதிகளுக்கு 1/5 பங்கும், 3ம் வாதிக்கு 1/5 பங்கும் பாத்தியப்பட்டது என்பது சரியா?

9) இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், தபசில் சொத்துக்கள் வாதிகளின் தாத்தா பெரியான் (எ) பெரியசாமிக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்றும், மேற்படியார் காலம்சென்ற பிறகு மேற்படி பெரியான் (எ) பெரியசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அவரது வாரிசுகளுக்கு முழுமையாக கிடைக்கப்பெற்று கூட்டாக அனுபவம் செய்து, மேற்படி நபர்கள் தங்களுக்குள் செய்துகொண்ட வாய்மொழி பாகப்பிரிவினை மூலம் தலா 1/5 ஒவ்வொருத்தருக்கும் கிடைக்கப்பெற்று தனித்தனியாக ஆண்டு அனுபவித்து வந்தனர் என்றும், அதில் பிராது தபசில் சொத்துக்கள் மட்டும் பொதுவான அனுபவத்தில் வைத்துக்கொள்ளப்பட்டது என்றும், இதில் பெரியான் மகன் சண்முகம் அவருக்குரிய பாக சொத்துக்களை பொறுத்து 1 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டதாக சமீபத்தில் இந்த வாதிகளுக்கு தெரியவந்தது என்றும், ஆனால், சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் சண்முகம் இறந்துபோனார் என்றும், மேற்படி முத்து (எ) சப்பாணிமுத்து தனக்கு வாய்மொழி பாகத்தில் கிடைக்கப்பெற்ற தபசில் சொத்துக்களையும், வேறு பல சொத்துக்களையும் பொறுத்து 30.08.2004ம் தேதிய மேலநீலிதநல்லூர் சார்பதிவாளர் அலுவலக 865/2004 நம்பர் ஏற்பாட்டு ஆவணம் மூலம் தனது ஒரே ஆண்மகனான இந்த 3ம் வாதி பெயருக்கு ஒரு பதிவு ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டார் என்றும், அவ்வாறு இந்த 3ம் வாதி பெயருக்கு மேற்படி பதிவு ஏற்பாடு ஆவணம் எழுதியபோது பிராது தபசில் சொத்தில் 1/4 பங்கு என்று தவறுதலாக எழுதிக்கொடுத்து விட்டார் என்றும், மேற்படி ஏற்பாடு ஆவணத்தில் தபசில் சொத்தில் தவறுதலாக 1/4 பங்கு என எழுதப்பட்ட விபரம் பின்னர் தெரியவரவே மேற்படி முத்து (எ) சப்பாணிமுத்து

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.06.12 18:12:27 +0530

மேலநீலிதநல்லூர் சார்பதிவாளர் அலுவலக 28.09.2015ம் தேதிய 1922/2015 நம்பர் சீர்திருத்த ஆவணம் மூலம் தபசில் சொத்துக்களில் 1/5 பங்கு என சரியாக காண்பித்து 3ம் வாதிக்கு சீர்திருத்தம் செய்துகொடுத்துள்ளார் என்றும், 30.08.2004ம் தேதிய பதிவு ஏற்பாடு ஆவணம் மூலம் தபசில் சொத்துக்களில் 1/5 பங்கு 3ம்வாதிக்கு கிடைக்கப்பெற்று வருவாய்துறையில் பட்டா ஏற்பட்டு தீர்வை முதலியன செலுத்தி அமைதியாக ஆண்டனுபவித்து வருகிறார் என்றும், பிராது 1ம் தபசில் 1ம் அயிட்ட கிணற்றிற்கு வந்த மின் இணைப்பானது கூட்டுரிமையாளர்களின் சம்மதக்கடிதத்தின் பேரில் 1ம் பிரதிவாதி பெயரில் மனு கொடுக்கப்பட்டு 916 என்ற எண்ணில் இலவச மின் இணைப்பு பொதுவாக பெறப்பட்டு 2ம் அயிட்ட மோட்டார் பம்பு செட்டை பொதுவாக வாங்கி நாளது தேதிவரையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும், பிராது 2ம் தபசில் சொத்து கிணற்றுக்கு பெரியான் (எ) பெரியசாமி உயிருடன் இருக்கும்போதே மின் இணைப்பு பெற்று மோட்டார் பம்பு செட்டுக்கள் பொறுத்தப்பட்டு, பொதுவாக 1, 2 வாதிகள் இருவரும் சேர்ந்து 1/5 பங்கும், 3ம் வாதிக்கு 1/5 பங்கும், 1, 3 பிரதிவாதிகளுக்கு தலா ஐந்தில் 1 1/2 பங்கும் சித்தித்து நாளது தேதிவரையில் பொதுவாக அனுபவித்து வரப்படுகிறது என்றும், பிராது 3ம் தபசில் சொத்தானது பொதுவான பயன்பாட்டிற்காகவும் ஒதுக்கப்பட்டு பொதுவாக அனுபவித்து வரப்படுகிறது என்றும், அவ்வாறு பொதுவான அனுபவத்திலுள்ள பிராது 3ம் தபசில் சொத்தில் பிரதிவாதிகள் வாதிகளின் சம்மதமின்றி எந்தவொரு அனுமதியும் பெறாமல் ஆழ்துளைக்கிணறு ஏற்படுத்திவிட்டனர் என்றும், பிராது தபசில் சொத்துக்களில் எந்தவித தனித்த உரிமையோ, அனுபவமோ இல்லாத 1, 3 பிரதிவாதிகள் 1ம் தபசில் 2ம் அயிட்ட சொத்திலும், 3ம் தபசில் சொத்திலும் வாதிகளுக்குரிய பங்குரிமையை மறைத்து மோசடியாக 2, 4 பிரதிவாதிகளுக்கு மேற்படி ஏற்பாடு ஆவணங்கள் உற்பத்தி செய்து கொடுத்துள்ளனர் என்றும், மேற்படி 2, 4 பிரதிவாதிகள் பெயரில் 1, 3 பிரதிவாதிகள் மோசடியாக பிறப்பித்துக் கொடுத்துள்ள மேற்படி மோசடி பதிவு ஏற்பாடு ஆவணங்கள் சட்டப்படி

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.06.12 18:12:35 +0530

செல்லக்கூடியதில்லை என்றும், எனவே, வாதிகளுக்கு வழக்கில் கோரிய பரிகாரங்கள் கிடைக்கக்கூடியது என்றும் வாதிட்டார்.

10) இவ்வழக்கில் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், பிராதின் தபசில் சொத்துக்களும் வேறு சொத்துக்களும் பெரியான் (எ) பெரியசாமிக்கு கிரைய ஆவணம் மூலமும் பாத்தியப்பட்ட சொத்துக்களாகும் என்றும், பெரியான் (எ) பெரியசாமி உயிருடன் இருந்த காலத்திலேயே அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை கடந்த 1985ம் வருடம் தனது ஆண் மக்களான இறந்துபோன சங்கரனின் வாரிசுகள், முத்து (எ) சப்பாணிமுத்து, முருகன், வேலு, சண்முகம் ஆகியோர்களுக்கு வாய்மொழியாக பாகபிரிவினை செய்து கொடுத்துவிட்டார் என்றும், மேற்படி சொத்துக்களை சங்கரனுக்கு உண்டான பாக சொத்துக்களை அவரது வாரிசுகளும் மற்றும் இதர வாரிசுகளுக்கு கிடைத்த பங்கினை தனித்தனியே பிரித்து நாளது தேதிவரை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், இந்நிலையில், சண்முகம் அவருக்கு உண்டான பாக சொத்தினை பொறுத்து 1ம் பிரதிவாதிக்கும் 3ம் பிரதிவாதிக்கும் கடந்த 2001ல் கிரையம் கொடுத்துவிட்டார் என்றும், மேற்படி சொத்துக்களை 1, 3 பிரதிவாதிகள் சர்வசுதந்திர பாத்தியதையுடன் அனுபவம் செய்து வருகின்ற விவரம் வாதிகளுக்கு நன்கு தெரியும் என்றும், மேலும், 1, 3 பிரதிவாதிகளில் தங்களின் மக்களுக்கு அதாவது 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு தனக்கு பாகம் கிடைத்த சொத்தை ஒரு ஏற்பாடு ஆவணம் பிறப்பித்துக் கொடுத்துவிட்டார் என்றும், அதுபோல் 3ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு ஒரு ஏற்பாடு ஆவணம் பிறப்பித்துக் கொடுத்துள்ளார் என்றும், வாதிகள் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக கூறியிருப்பது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், இந்த வாதிகள் 3ம் தபசில் சொத்தில் இந்த பிரதிவாதிகள் ஏற்படுத்தியுள்ள ஆழ்துளைக்கிணறு கடந்த 2005ம் ஆண்டே ஏற்படுத்தப்பட்டுவிட்டது என்றும், அந்த விபரமும் வாதிகளுக்கு தெரியும் என்றும், மேற்படி ஆழ்துளைக்கிணறு பிரதிவாதிகளுக்கு

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:12:42 +0530

பாத்தியப்பட்ட இடத்தில் போடப்பட்டுள்ளது என்றும், எனவே, வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

11) பெரியான் என்ற பெரியசாமி என்பவரின் மனைவி கருப்பாயம்மாள் என்பதும், மேற்படி பெரியான் என்ற பெரியசாமி மற்றும் மனைவி கருப்பாயம்மாள் காலம்சென்றுவிட்டனர் என்பதும், மேற்படியார்களுக்கு சங்கரன், கருப்பாயம்மாள், ராக்கம்மாள், முத்து (எ) சப்பாணிமுத்து, சண்முகம், முருகன், வேலு ஆகியோர் மக்கள் என்பதும், மேற்படியார்களில் சங்கரன் 23.03.1983 ல் காலம்சென்றுவிட்டார் என்பதும், அவரது மக்கள் 1, 2 வாதிகள் மற்றும் 1 பெண் மகள் மாரியம்மாள் என்பதும், முத்து (எ) சப்பாணிமுத்துவின் மகன் இவ்வழக்கு 3 வது வாதி என்பதும், முருகன் இவ்வழக்கின் 1 வது பிரதிவாதி என்பதும், அவரது மகன் 2 வது பிரதிவாதி என்பதும், வேலு இவ்வழக்கின் 3 வது பிரதிவாதி என்பதும், அவரது மகன் 4 வது பிரதிவாதி என்பதும், சண்முகம் காலம்சென்றுவிட்டார் என்பதும், வாதிகள் மற்றும் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் ஆகும்.

12) மேலும், மேற்படி பெரியான் என்ற பெரியசாமியின் பெண் வாரிசுகளான கருப்பாயம்மாள் மற்றும் ராக்கம்மாள் ஆகியோருக்கு திருமணத்தின் போது தேவையான சீர்வரிசைகள் மற்றும் சீர்சீராட்டுகள் செய்து கொடுக்கப்பட்டதாகவும், அவர்களுக்கு பிராது தபசில் சொத்துக்களில் எவ்வித உரிமையோ அல்லது அனுபவமோ இல்லை என்றும் வாதிகள் மற்றும் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் ஆகும்.

**13) பிராது தபசில் சொத்துக்கள் பெரியான் என்ற பெரியசாமியின் பூர்வீக சொத்துக்களா? அல்லது கிரையம் பெறப்பட்ட தனி சொத்துக்களா? என்பது குறித்து பரிசீலிக்கும்போது,** இவ்வழக்கில் வாதிகள் தரப்பில், பிராது தபசில்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:12:48 +0530

சொத்துக்கள் அவர்களது மூதாதையரான பெரியான் என்ற பெரியசாமிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என கட்சி எடுக்கப்பட்டபோதிலும், மேற்படி சங்கதியை நிரூபிப்பதற்கான எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் வாதிகள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

14) மாறாக, 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பி.வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ.5 ஆகிய பதிவு கிரைய ஆவணங்களின் மூலம், பிராது தபசில் சொத்துக்கள் அடங்கிய சர்வே எண்.8 மற்றும் சர்வே எண்.9 சொத்துக்கள் முறையே 18.01.1985 மற்றும் 20.03.1978 தேதியிட்ட பதிவு கிரைய ஆவணங்கள் மூலமாக பெரியான் என்ற பெரியசாமியால் கிரையம் பெறப்பட்டவை என நிரூபிக்கப்பட்டுள்ளது.

15) மேற்படி பி.வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ.5 கிரைய ஆவணங்களுக்கு எதிராக வாதிகள் தரப்பில் எவ்வித சான்றாவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. இதிலிருந்து, பிராது தபசில் சொத்துக்கள் பெரியான் என்ற பெரியசாமியின் பூர்வீக சொத்துக்கள் என்ற வாதிகளின் கட்சி உண்மையல்ல என்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

16) காலம்சென்ற பெரியான் என்ற பெரியசாமியின் காலத்திற்குப் பின்னர் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அவரது ஆண் வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டுள்ளது என்பதை வாதிகள் மற்றும் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் இவ்வழக்கில் ஒப்புக்கொண்டுள்ளனர். ஆகையால், வாதிகள் தபசில் சொத்துக்கள் காலம்சென்ற பெரியான் என்ற பெரியசாமியின் பூர்வீக சொத்துக்கள் என நிரூபிக்கத் தவறியிருப்பது மட்டுமே, அவர்களின் முழு வழக்கையும்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:12:56 +0530

நிராகரிப்பதற்கான காரணமாக அமையாது என இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

17) **இவ்வழக்கு 1வது தபசில் 1, 2 அயிட்ட சொத்துக்களில் 1, 2 வாதிகளுக்கு 1/5 பாகமும், மற்றும் 3வது வாதிக்கு 1/5 பாகமும் உரிமை உள்ளதா?** என்பது குறித்து பரிசீலிக்கும்போது, இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 ஆக 3வது வாதிக்கு அவரது தந்தையால் 30.08.2004ல் பிறப்பிக்கப்பட்ட ஏற்பாடு ஆவணம் மற்றும் வா.சா.ஆ.2 ஆக 28.09.2015 தேதியிட்ட சீர்திருத்த பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட வா.சா.ஆ.2 ஆன சீர்திருத்த ஏற்பாடு ஆவணத்தின் சொத்து விபரத்தை பார்வையிடும்போது, அதில், தபசில் சர்வே எண்.8 குறித்து,

> ".......மேலநீலிதநல்லூர் சார்பதிவகம் 30.08.2004ம் தேதிய 865/2004 நம்பர் பத்திரம் மூலமாக இதன் தபசில் சொத்துக்களை ரூ.27000ம் (ரூபாய் இருபத்தி ஏழாயிரம் மட்டும்) ஏற்பாடு ஆவணம் பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தேன். மேற்படி ஏற்பாடு ஆவணம் பத்திரத்தில் 2வது பக்கத்தில் **புஞ்சை சர்வே எண் 8 நிர் ஏக் 3 செ 01ல் 5ல் 1 பங்கு ஏக் 3 செ 01ல் செ 60.020 என்று எழுதுவதற்கு பதிலாக 4ல் 1 பங்கு ஏக் 3 செ 01ல் செ 75.25** என்றும் கை தவறுதலாக எழுதப்பட்டுவிட்டது..........."
>
> "**.......சீர்திருத்தலுக்கு பின்புள்ள சரியான சொத்து விபரம்** : தென்காசி பதிவு மாவட்டம் மேலநீலிதநல்லூர் சார்பதிவகம் சின்னக்கோவிலான்குளம் கிராமம் அயன் புஞ்சை சர்வே 8 நம்பர் ஏக் 3 செ 01ல் செ 60.020 (0.24.30 ஏர்ஸ்)க்கு மால். பொது வாய்க்காலுக்கும் (வ) பே.மாடசாமி புஞ்சைக்கும் (தெ) முருகன், வேலு இவர்கள் புஞ்சைக்கும் (கி) சங்கரன் புஞ்சைக்கும் (மே) இதற்குள் செ 60.020ம் **அதில் இருக்கும் கிணற்றிலும் கமலை குழி வாய்க்கால் வழிநடை சகலத்திலும் 5ல் 1 பங்கு பாத்தியமும்......"**

என கண்டு எழுதப்பட்டுள்ளது.

18) இதிலிருந்து, 3வது வாதியின் தந்தையால் சர்வே எண் 8ல் உள்ள

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:13:03 +0530

கிணற்றிலும் கமலை குழி வாய்க்கால் வழிநடை சகலத்திலும் 5ல் 1 பங்கு பாத்தியம் ஒதுக்கப்பட்டிருப்பதாக வா.சா.ஆ.2ல் தெரிவிக்கப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

19) மேலும், இந்நிலையில், இவ்வழக்கு 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.8 ஆக 05.03.2001 தேதியிட்ட 1 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு அவரது சகோதரரான சண்முகம் என்பவரால் பிறப்பிக்கப்பட்ட கிரைய ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், தபசில் சர்வே எண்.8ல் உள்ள கிணற்றில் 5ல் 1 பங்கு கிரையம் கொடுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

20) இவ்வழக்கு 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தங்கள் தரப்பு ஆவணமான மேற்கண்ட பி.வா.சா.ஆ.8 கிரைய ஆவணம் மூலமாக தபசில் சர்வே எண்.8ல் உள்ள கிணற்றில் 5 பங்குதாரர்கள் உண்டு என்பதை ஒப்புக்கொண்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

21) மேலும், 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் அளித்த 1வது பிரதிவாதியான பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில்,"**.....புல எண்.8ல் உள்ள கிணறு குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்**....." என சாட்சியம் அளித்துள்ளார்.

22) மேலும், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.6 ஆன 20.06.2009 தேதியிட்ட செயற்பொறியாளர், பொதுதகவல் அலுவலரிடமிருந்து 3வது வாதியால் பெறப்பட்ட தகவல்களின் பரிசீலனையில் இருந்து, தபசில் புல எண்.8ல் உள்ள 3 HP மோட்டாருக்கு மின் இணைப்பு கோரி கூட்டுரிமையாளர்களான பெரியான் (எ) பெரியசாமியின் வாரிசுகள் அனைவரின் சம்மதத்தின் பேரில் 1வது பிரதிவாதி பெயரில் மின் இணைப்பு எண்.916 வழங்கப்பட்டிருப்பதையும், மின் இணைப்பு வழங்குவதற்கான விண்ணப்பத்தில்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:13:10 +0530

4 வது காலத்தில் கிணற்றின் சொந்தக்காரர் மற்றும் பங்குதாரர் பெயர் என்ற இடத்தில் பெரியான் வாரிசுகளான 3 வது வாதியின் தந்தையான முத்து, 1 வது பிரதிவாதியான முருகன், 3 வது பிரதிவாதியான வேலு, சண்முகம் ஆகியோர்கள் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருப்பதையும் இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

23) மேலும், இவ்வழக்கில் நீ.ம.சா.1 ஆக சாட்சியம் அளித்த தமிழ்நாடு மின்சார வாரிய செயற்பொறியாளர் வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையில்,

> “........என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் உள்ள விண்ணப்பம் முருகன் என்பவர் பெயரில் மின் இணைப்பு பெறுவதற்காக பங்குதாரர் கிணறு என்பதால் மனுதாரர் பெயருக்கு மின் இணைப்பு பெற இதர பங்குதாரர்களிடம் இசைவு பெறப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் உள்ள முருகன் பெயரிலான விண்ணப்பத்தில் பங்குதாரர்கள் பெயர் மற்றும் கையொப்பம் உள்ளது அதனால் அவர்கள் இசைவு கொடுத்துள்ளதாக தெரியவருகிறது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் உள்ள விண்ணப்பம் முருகன் என்பவர் பெயரில் மின் இணைப்பு பெறுவதற்காக இதர பங்குதாரர்களிடம் இசைவு கிராம நிர்வாக அலுவலர் நிலையில் கையொப்பம் பெறப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்....." என்றும்,
>
> மேலும், ".......என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் இணைக்கப்பட்ட விண்ணப்பத்தில் 4 வது காலத்தில் கிணற்றின் சொந்தக்காரர் மற்றும் பங்குதாரர் பெயர் என்ற விபரத்தில் முத்து, த/பெ.பெரியான், முருகன், த/பெ.பெரியான், வேலு, த/பெ. பெரியான், சண்முகம், த/பெ.பெரியான் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் இணைக்கப்பட்ட விண்ணப்பத்தில் 5 வது காலத்தில் கிணற்றின் பரப்பு 1.22 ஹெக்டேர் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் இணைக்கப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட மின் இணைப்பு தற்போது வரை செயல்பாட்டில் இருந்து வருகிறது என்றால் சரிதான்...."

என சாட்சியம் அளித்துள்ளார்.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:13:18 +0530

24) இதிலிருந்து, தபசில் புல எண்.8 ல் உள்ள 3 HP மோட்டாருக்கான மின் இணைப்பு கூட்டுரிமையாளர்கள் சம்மதத்தின்பேரில் 1 வது பிரதிவாதி பெயருக்கு பங்குதாரர்களில் ஒருவர் என்ற முறையில் வழங்கப்பட்டுள்ளது என்பதையும், தபசில் புல எண்.8 ல் உள்ள 3 HP மோட்டாருக்கான மின் இணைப்பில் மொத்தம் 5 பங்குதாரர்களுக்கும் உரிமை உள்ளது என்பதையும் இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

25) மேலும், இவ்வழக்கு 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தபசில் சர்வே எண்.8 ல் உள்ள கிணறு மற்றும் அதனுடன் தொடர்புடைய 3 HP மின்மோட்டார் பம்புசெட் மற்றும் அதில் இருக்கிற மின் இணைப்பு எண்.916 மேற்படியார்களுக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்பதை நிரூபணம் செய்யும் வகையில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

26) மேற்கண்ட வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2, வா.சா.ஆ.6 மற்றும் பி.வா.சா.ஆ.8 ஆகிய ஆவணங்களின் பரிசீலனையில் இருந்து, பிராது 1ம் தபசில் சொத்தான சர்வே எண்.8–ல் உள்ள கிணறு மற்றும் அதனுடன் தொடர்புடைய 3 HP மின்மோட்டார் பம்புசெட்டில் மொத்தம் 5 பங்குதாரர்களுக்கு உரிமை இருப்பது தெளிவாகிறது.

27) எனவே, பிராது 1ம் தபசில் 1, 2 அயிட்ட சொத்துக்களான சர்வே எண்.8–ல் உள்ள கிணறு மற்றும் அதிலுள்ள 3 HP மின்மோட்டார் பம்புசெட் மற்றும் அதில் இருக்கிற மின் இணைப்பு எண்.916 ஆகியவற்றில் 1 மற்றும் 2ம் வாதிகளுக்கு சேர்ந்து 1/5 பங்கு உரிமையும், 3ம் வாதிக்கு தனியாக 1/5 பங்கு உரிமையும் இருப்பது வாதிகளால் நிரூபிக்கப்பட்டுள்ளது என இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:13:25 +0530

28) **இவ்வழக்கு 2வது தபசில் சொத்தில் 1, 2 வாதிகளுக்கு 1/5 பாகமும், மற்றும் 3வது வாதிக்கு 1/5 பாகமும் உரிமை உள்ளதா?** என்பது குறித்து பரிசீலிக்கும்போது, வாதிகள் தங்களுக்கு 2வது தபசில் சொத்தில் 1/5 பங்கு உரிமை உண்டு என இவ்வழக்கில் கோரியுள்ளனர். இந்நிலையில், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 3ம் வாதியின் தந்தையால் 3வது வாதிக்கு பிறப்பிக்கப்பட்ட வா.சா.ஆ.1 ஏற்பாடு ஆவணத்தின் சீர்திருத்த ஏற்பாடு ஆவணமான வா.சா.ஆ.2 ல் சர்வே எண்.9 குறித்து,

> "....3 வது பக்கத்தில் சர்வே **எண் 9 நிர் ஏக் 4 செ 21ல் 6ல் 1 பங்கு ஏக் 4 செண்ட் 21ல் செண்டு 70.05 என்று எழுதுவதற்கு பதிலாக சர்வே எண் 9 நிர் ஏக் 4 செ 21ல் 4 ல் 1 பங்கு ஏக் 1 செண்ட் 0.5.25** என்று கை தவறுதலாக எழுதப்பட்டுவிட்டது......" என்றும்,
>
> மேலும், **".......சீர்திருத்தலுக்கு பின்புள்ள சரியான சொத்து விபரம்** :
>
> ".......மேற்படி கிராமம் மேற்படி சர்வே 9 நிர் ஏக் 4 செ 21ல் செ 70.05 க்கு மால்.
>
> பொது வாய்க்காலுக்கும் (தெ) சங்கரன் புஞ்சைக்கும் (கி) முருகன், வேலு இவர்கள் புஞ்சைக்கும் (மே) சுப்பிரமணியன் புஞ்சைக்கும் (வ) இதற்குள் செ 70.05 (0.28.5 ஏர்ஸ்) உள்ள நிலமும் அதிலுள்ள கிணர் 1 கமலைகுழி பத்தநடை வாய்க்கால் வழிநடை சகலத்திலும் 3 ஹெச்.பி. மின்மோட்டார் பம்பு செட் வகையறாவிலும் 5ல் 1 பங்கு பாத்தியமும் தபசில் விபரம் சரி........"

என கண்டு எழுதப்பட்டுள்ளது.

29) மேற்கண்ட வா.சா.ஆ.2ன் பரிசீலனையில் இருந்து, **சர்வே எண் 9**ல் உள்ள சொத்தானது 6 பாகங்களாக பிரிக்கப்பட்டிருப்பதாகவும், அதிலுள்ள கிணர் 1 கமலைகுழி பத்தநடை வாய்க்கால் வழிநடை சகலத்திலும் 3 ஹெச்.பி. மின்மோட்டார் பம்பு செட் வகையறாவில் 5 பங்குகள் இருப்பதாக 3வது வாதியின் தந்தையால் தெரிவிக்கப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:13:33 +0530

30) இந்நிலையில், இவ்வழக்கில் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பி.வா.சா.ஆ.8 ஆன 1 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு அவரது சகோதரரான சண்முகம் என்பவரால் பிறப்பிக்கப்பட்ட கிரைய ஆவணத்தினை பார்வையிடும்போது, அதில், தபசில் சர்வே எண்.9 ல் உள்ள கிணறு குறித்து **"........மேற்படி நிர் நிலத்தில் உள்ள கிணறில் 6 ல் 1ம் இதில் உள்ள 3 HP மோட்டாரில் 5 ல் 1ம் சரி.........**" என கண்டு எழுதப்பட்டுள்ளது.

31) மேலும், இந்நிலையில், 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பி.வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.6 ஆன முத்து என்பவரால் 1ம் பிரதிவாதி மற்றும் 3ம் பிரதிவாதிக்கு சர்வே எண்.9 ல் உள்ள சொத்து குறித்து பிறப்பிக்கப்பட்ட கிரைய ஆவணங்களை பரிசீலிக்கும்போது அதில், தபசில் சொத்து விவரங்களில் **சர்வே எண் 9** ல் உள்ள சொத்து குறித்து,

**பி.வா.சா.ஆ.3 ல் உள்ள சொத்து விபரம்,**

".......தென்காசி பதிவு மாவட்டம், மேலநீலிதநல்லூர் சார்பதிவு சரகம் மேலநீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றியம் சின்னக்கோவிலான்குளம் ஊராட்சி சின்னக்கோவிலான்குளம் கிராமம் அயன் புஞ்சை சர்வே 9 நம்பர் 1.70.5 ஏர்ஸ்க்கு ஏக்கர் 4 செண்ட் 21 ல் மேல்பக்கத்தில் தவனைக்கு கீழ்பக்கம் செண்டு 71 ல் தென்பக்கம் செண்ட் 35 1/2 க்கு 0.14.37 ஏர்ஸ்க்கு மால்

வடக்கில் – நாளது தேதியில் கிரையம் வாங்கும் முருகன் புஞ்சை
தெற்கில் – சு.மாடன் புஞ்சை
கிழக்கில் – ச.முத்து, ச.தவசி இவர்கள் புஞ்சை
மேற்கில் – தென்வடல் வாய்க்கால்
இம்மாலுக்குள்பட்டதும்.

மேற்படி நம்பரில் இருக்கிற **கிணறு 1ல் 6 ல் 1 பங்கில் பாதி பங்கும்**

மேற்படி கிணற்றில் இருக்கிற **3 HP மின்மோட்டார் பம்பு செட்டில் 6 ல் 1 பங்கில் பாதி பங்கும்** இதில் மின் இணைப்பு எண்.322 உள்ளதும் சேர்ந்து கிணறு தண்ணீர் கமலைக்குழி பத்தல் நடை வாய்க்கால் வழிநடை பாத்தியமும் சேர்ந்து தபசில்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:13:40 +0530

சொத்து விவரம் சரி........."

**<u>பி.வா.சா.ஆ.6 ல் உள்ள சொத்து விபரம்,</u>**

".......தென்காசி பதிவு மாவட்டம், மேலநீலிதநல்லூர் சார்பதிவு சரகம் மேலநீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றியம் சின்னக்கோவிலான்குளம் ஊராட்சி சின்னக்கோவிலான்குளம் கிராமம் அயன் புஞ்சை சர்வே 9 நம்பர் 1.70.5 ஏர்ஸ்க்கு ஏக்கர் 4 செண்ட் 21ல் மேல்பக்கத்தில் தவனைக்கு கீழ்பக்கம் செண்டு 71ல் வடபக்கம் செண்ட் 35 1/2 க்கு 0.14.37 ஏர்ஸ்க்கு மால்

வடக்கில் – எழுதிவாங்குபவர் கையிருப்பு புஞ்சை மற்றும் கிழமேல் வாய்க்கால்
தெற்கில் – நாளது தேதியில் கிரையம் வாங்கும் வேலு புஞ்சை
கிழக்கில் – ச.முத்து, ச.தவசி இவர்கள் புஞ்சை
மேற்கில் – தென்வடல் வாய்க்கால்
இம்மாலுக்குள்பட்டதும்.

**மேற்படி நம்பரில் இருக்கிற கிணறு 1ல் 6ல் 1 பங்கில் பாதி பங்கும்**

**மேற்படி கிணற்றில் இருக்கிற 3 HP மின்மோட்டார் பம்பு செட்டில் 6ல் 1 பங்கில் பாதி பங்கும்** இதில் மின் இணைப்பு எண்.322 உள்ளதும் சேர்ந்து கிணறு தண்ணீர் கமலைக்குழி பத்தல் நடை வாய்க்கால் வழிநடை பாத்தியமும் சேர்ந்து தபசில் சொத்து விவரம் சரி........."

என கண்டு எழுதப்பட்டுள்ளது.

32) மேற்கண்ட பி.வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.6ன் பரிசீலனையில் இருந்து, மூலமாக சர்வே எண்.9ல் உள்ள கிணறு மற்றும் அதிலுள்ள 3 HP மோட்டார் மற்றும் மின் இணைப்புக்கு ஆறு பங்குதாரர்கள் என 1 மற்றும் 3 பிரதிவாதிகளால் மேற்கண்ட தங்கள் தரப்பு ஆவணங்கள் மூலமாகவே ஒப்புக்கொண்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

33) மேற்கூறியவாறு, சர்வே எண்.9ல் உள்ள கிணறு மற்றும் அதிலுள்ள 3 HP மோட்டார் மற்றும் மின் இணைப்புக்கு ஆறு பங்குதாரர்கள் என மேற்படி

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:13:47 +0530

முத்து என்பவரால் 1ம் பிரதிவாதி மற்றும் 3ம் பிரதிவாதிக்கு பிறப்பிக்கப்பட்ட மேற்கண்ட பி.வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.6 கிரைய ஆவணங்களில் தெரிவித்திருப்பது குறித்து வாதிகள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்கப்படவில்லை. மேலும், மேற்படி ஆவணங்களை ரத்து செய்யவும் எவ்வித பரிகாரமும் வாதிகளால் இவ்வழக்கில் கேட்கப்படவில்லை.

34) மேற்கண்ட பி.வா.சா.ஆ.3, பி.வா.சா.ஆ.6 மற்றும் பி.வா.சா.ஆ.8 ஆகியவற்றின் மூலமாக சர்வே எண்.9ல் உள்ள கிணறு, 3 HP மோட்டார் மற்றும் மின் இணைப்புக்கு மொத்தம் ஆறு பங்குதாரர்கள் உள்ள நிலையில், வழக்கு 2ம் தபசில் சொத்தில் மொத்தம் 5 பங்குதாரர்கள் என வாதிகள் வழக்கில் கூறுவது உண்மையல்ல என்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது. இதிலிருந்து, வழக்கு 2ம் தபசில் சொத்தில் 1 மற்றும் 2ம் வாதிகளுக்கு சேர்ந்து 5ல் 1 பங்கு உரிமையும், 3ம் வாதிக்கு தனியாக 5ல் 1 பங்கு உரிமையும் உள்ளது என்பதை வாதிகள் தங்களது சாட்சிய, சான்றாவணங்களின் மூலமாக நிரூபிக்க தவறியுள்ளனர் என்று இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

35) எனவே, மேற்கண்ட பரிசீலனையில் இருந்து,

(i) பிராது 1ம் தபசில் 1, 2 அயிட்ட சொத்துக்களில் 1 மற்றும் 2ம் வாதிகளுக்கு சேர்ந்து 5ல் 1 பங்கு உரிமையும், 3ம் வாதிக்கு தனியாக 5ல் 1 பங்கு உரிமையும் உள்ளது என்றும்,

(ii) மேலும், வழக்கு 2ம் தபசில் சொத்தில் 1 மற்றும் 2ம் வாதிகளுக்கு சேர்ந்து 5ல் 1 பங்கு உரிமையும், 3ம் வாதிக்கு தனியாக 5ல் 1 பங்கு உரிமையும் உள்ளது என்பதை வாதிகள் தங்களது சாட்சிய, சான்றாவணங்களின் மூலமாக நிரூபிக்க தவறியுள்ளனர் என்று இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்பட்டு **எழுவினா.1**–ற்கு தீர்வு காணப்படுகிறது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:13:54 +0530

**36) <u>எழுவினா.2</u>**

- பிராது தபசில் சொத்துக்களைப் பொறுத்து வாதிகள் கோரும் விளம்புகை பரிகாரமும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?

37) மேற்கண்ட எழுவினா.1–ற்கான பரிசீலனையில் இருந்து, பிராது 1ம் தபசில் 1, 2 அயிட்ட சொத்துக்களில் 1 மற்றும் 2ம் வாதிகளுக்கு சேர்ந்து 5ல் 1 பங்கு உரிமையும், 3ம் வாதிக்கு தனியாக 5ல் 1 பங்கு உரிமையும் உள்ளது என்று முடிவு காணப்பட்டுள்ளது. ஆகையால், 1ம் தபசில் சொத்து குறித்து வாதிகள் கோரிய விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்று இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

38) மேலும், பிராது 1ம் தபசில் 1, 2 அயிட்ட சொத்துக்களில் வாதிகள் மின் மோட்டாரை பயன்படுத்தி, தண்ணீர் பாய்ச்சி விவசாயம் செய்து அமைதியான முறையில் அனுபவித்து வருவதற்கு யாதொரு வகையிலும், எவ்வித இடையூறும் பிரதிவாதிகள் செய்யக்கூடாது என பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்று இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

39) மேற்கண்ட எழுவினா.1ல் பரிசீலிக்கப்பட்டவாறு, மேலும், வழக்கு 2ம் தபசில் சொத்தில் 1, 2 வாதிகள் மற்றும் 3வது வாதிக்கு தலா 1/5 பாகம் உரிமை உள்ளது என்பதை வாதிகள் தங்களது சாட்சிய, சான்றாவணங்களின் மூலமாக நிரூபிக்காத காரணத்தினால், வழக்கு 2ம் தபசில் சொத்து குறித்து வாதிக்கு வழக்கில் கோரியவாறு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல என்று தள்ளுபடி செய்யப்பட்டும், இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்பட்டு **எழுவினா. 2**–ற்கு தீர்வு காணப்படுகிறது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:14:01 +0530

**<u>40) எழுவினா.3</u>**

- பிராது 3ம் தபசில் சொத்தில் பிரதிவாதிகள் ஏற்படுத்தியுள்ள ஆழ்துளை கிணற்றை பொறுத்து வாதிகள் கோரும் வலியுறுத்துக் கட்டளை வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?

41) இவ்வழக்கில் வாதிகள், பிராது 3ம் தபசில் சொத்தான சர்வே எண்.8 ல் ஏக்கர் 3 செண்ட் 1ல் நடுமையத்தில் இருக்கிற 40 செண்ட் பிராது 1 மற்றும் 2ம் தபசில் கிணறுகளில் இருந்து தூர்வாரப்படும் மண், கற்கள் முதலியவற்றை கொட்டி வைப்பதற்காகவும், பொதுப்பயன்பாட்டிற்காகவும் ஒதுக்கப்பட்ட பொதுச் சொத்து எனக் கூறி, அதில் பிரதிவாதிகள் அமைத்துள்ள ஆழ்துளைக் கிணற்றை அகற்றிட செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளால் இவ்வழக்கில் கேட்கப்பட்டுள்ளது.

42) ஆனால், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆகிய ஆவணங்களில் 3ம் தபசில் சொத்து குறித்து எவ்வித உரிமையும் குறிப்பிடப்படவில்லை. மேலும், 3வது வாதியின் தந்தையான முத்து (எ) சப்பாணிமுத்து உயிருடன் உள்ள நிலையில், மேற்படியார் இவ்வழக்கில் ஒரு தரப்பினராக கட்சி சேர்க்கப்படவும் இல்லை, சாட்சியாக விசாரிக்கப்படவும் இல்லை. மேலும், 3ம் தபசில் சொத்தில் தனக்கு 1/5 பங்கு உரிமை இருப்பதாக 3வது வாதி தனித்து கோருவதற்கான உரிமையையும் வாதிகளால் இவ்வழக்கில் நிரூபிக்கப்படவில்லை.

43) மேலும், இவ்வழக்கில் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பி.வா.சா.ஆ.8 ஆன 1 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு அவரது சகோதரரான சண்முகம் என்பவரால் பிறப்பிக்கப்பட்ட கிரைய ஆவணத்தில், தபசில் சர்வே எண்.8 ல் உள்ள சொத்து குறித்து,

> "........**2) 8 எட்டு நிர் ஏ 3 செ 1ல் (1.22.0 ஹெக்டேர்) நடுமத்தியில் செ 60க்கு மால்**

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:14:08 +0530

கிணறுக்கு (மே)
தங்கள் புஞ்சைக்கு (வ)
தவசி புஞ்சைக்கு (கி)
சப்பாணிமுத்து புஞ்சைக்கு (தெ)

இதற்குள்பட்டதும் இதில் உள்ள கிணறில் 5 ல் 1 பங்கும்........."
என கண்டு எழுதப்பட்டுள்ளது.

44) மேற்கண்ட பி.வா.சா.ஆ.8 ன் பரிசீலனையில் இருந்து, சர்வே எண்.8 ஏ 3 செ 1ல் (1.22.0 ஹெக்டேர்) நடுமத்தியில் செ 60 தனக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு என குறிப்பிட்டு 1 மற்றும் 3 பிரதிவாதிகளின் சகோதரர் சண்முகம் 1 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்திருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

45) மேலும், இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் சாட்சியம் அளித்த 3 வது வாதியான வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில்,

> "..........2001 ல் 1 வது பிரதிவாதிக்கும், 3 வது பிரதிவாதிக்கும் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் 2015 ல் கிரையம் வாங்கிவிட்டதாக 1, 3 பிரதிவாதிகள் சொன்னார்கள் அதனால் 5 ல் 1 பங்கு என நான் என் அப்பாவிடமிருந்து சீர்திருத்த பத்திரம் போட்டேன்......"

என சாட்சியம் அளித்துள்ளார்.

46) இதிலிருந்து, சண்முகம் 1 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு சர்வே நம்பர் 8 ல் நடுமையத்தில் இருக்கிற 60 செண்டினை 05.03.2001 ல் பி.வா.சா.ஆ.8 மூலமாக கிரையம் கொடுத்த விவரம் 2015 ல் தெரிந்த பிறகே, அதனை ஏற்றுக்கொண்டு வா.சா.ஆ.1 ஏற்பாடு ஆவணத்தில் சர்வே நம்பர் 8 ல் உள்ள பாகஉரிமையை சீர்திருத்தம் செய்து வா.சா.ஆ.3–னை 3 வது வாதியின் தந்தை 3 வது வாதிக்கு பிறப்பித்துள்ளார் என்பதை 3 வது வாதியே ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்திருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:14:15 +0530

47) மேலும், வாதிகளால் இவ்வழக்கில் சர்வே எண்.8 ல் ஏக்கர் 3 செண்ட் 1 ல் உள்ள சொத்தானது யார் யாருக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்பது குறித்த விளக்கமும் அதற்கான ஆவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்கண்ட பி.வா.சா.ஆ.8 ல் கண்டபடி சர்வே எண்.8 ல் ஏக்கர் 3 செண்ட் 1 ல் நடுமையத்தில் இருக்கிற 60 செண்ட் பெரியான் மகன் சண்முகத்திற்கு ஒதுக்கப்படவில்லை என வாதிகள் தரப்பில் இவ்வழக்கில் மறுக்கப்படவில்லை.

48) மேலும், மேற்கண்ட பி.வா.சா.ஆ.8 ஆவணத்திற்கு எதிராக வாதிகள் ஆட்சேபணை செய்யவில்லை. மேலும், மேற்படி ஆவணத்தை ரத்து செய்யவும் எவ்வித பரிகாரமும் இவ்வழக்கில் வாதிகளால் கேட்கப்படவில்லை. இதிலிருந்து, சர்வே எண்.8 ல் ஏக்கர் 3 செண்ட் 1 ல் நடுமையத்தில் இருக்கிற 60 செண்ட் பெரியான் மகன் சண்முகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்பதை வாதிகளே ஒப்புக்கொண்டு அமைதியாக இருந்துள்ளனர் என்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

49) மேலும், இவ்வழக்கு 3 வது தபசில் சொத்தான சர்வே எண்.8 ல் ஏக்கர் 3 செண்ட் 1 ல் நடுமையத்தில் இருக்கிற 40 செண்ட் காலம்சென்ற பெரியான் (எ) பெரியசாமி வாரிசுகளால் கூட்டாக அனுபவிக்கப்பட்டு வருகிறது என்பதை நிரூபிப்பதற்கான ஆவணங்களும் வாதிகள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

50) மேலும், இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் சாட்சியம் அளித்த வா.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில்,

> ".......சண்முகத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தை 1, 3 பிரதிவாதிகள் கிரையம் வாங்கிவிட்டார்கள் என்றால் சரிதான். பாகப்பிரிவினை நடந்து 30 வருடங்கள் ஆகிவிட்டது தனித்தனியாக அவரவர்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:14:22 +0530

சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். சண்முகத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தை 1, 3 பிரதிவாதிகள் கிரையம் வாங்கி போர் போட்டு பூச்செடிகள் வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். பூக்களை பறித்து சங்கரன்கோவில் மார்க்கெட்டில் விற்பனை செய்வார்கள் என்றால் சரிதான். நான் 1, 3 பிரதிவாதிகளுக்கு சித்தப்பா மகன் என்றால் சரிதான்......" என்றும்,

மேலும், ".......முருகேஷ் அப்பாவிற்கு பாகப்பிரிவினையில் 2 ஏக்கர் 9 செண்ட் கிடைத்தது என்றால் சரிதான். அதேபோல பாகப்பிரிவினையில் வேலுவிற்கு 2 ஏக்கர் 96 செண்ட் கிடைத்தது என்றால் சரிதான். சண்முகத்திடமிருந்து 1, 3 பிரதிவாதிகள் கிரையம் வாங்கியதால் கூடுதல் பாகமாக 2 ஏக்கர் 96 செண்ட் கிடைத்தது என்றால் சரிதான். சண்முகத்திடமிருந்து 1, 3 பிரதிவாதிகள் கிரையம் வாங்கியதால் கூடுதல் பாகமாக 2 ஏக்கர் 96 செண்ட் கிடைத்தது என்றால் சரிதான். முருகனுக்கு பாகப்பிரிவினையில் 2 ஏக்கர் 94 செண்ட் கிடைத்தது என்றால் சரிதான். முருகேஷ் தந்தை மற்றும் 1, 3 பிரதிவாதிகள் மேற்படி சொத்துக்களுக்கு தனிப்பட்டா பெற்றுவிட்டார்கள் என்றால் சரிதான்....."

என சாட்சியம் அளித்துள்ளார்.

51) மேற்கண்ட வா.சா.2ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தின் பரிசீலனையில் இருந்து, சண்முகத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தை 1 மற்றும் 3 பிரதிவாதிகள் கிரையம் வாங்கி போர் போட்டு பூச்செடிகள் வைத்து அனுபவித்து வருகின்றனர் என்பதையும், சண்முகத்திடமிருந்து 1 மற்றும் 3 பிரதிவாதிகள் கிரையம் வாங்கியதால் கூடுதல் சொத்து கிடைத்தது என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார்.

52) மேற்கண்ட பரிசீலனையில் இருந்து, பி.வா.சா.ஆ.8ல் கண்டபடி சர்வே எண்.8ல் ஏக்கர் 3 செண்ட் 1ல் நடுமையத்தில் இருக்கிற 60 செண்ட் பெரியான் மகன் சண்முகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்பதையும், அதனை பி.வா.சா.ஆ.8 மூலமாக 1 மற்றும் 3 பிரதிவாதிகள் கிரையம் பெற்று அனுபவித்து

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:14:29 +0530

வருகிறார்கள் என்பதையும் இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

53) மேலும், வா.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில்,

"......முருகனுக்கும் வேலுவுக்கும் என்னுடன் பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரியல்ல பேசிக்கொள்வோம். **முருகன், வேலு போர்போட்டுள்ளது நல்ல தண்ணீர் என்றால் சரிதான். கிணற்றில் உள்ள தண்ணீரைக் காட்டிலும் முருகன், வேலு போட்டுள்ள போரில் தான் அதிக தண்ணீர் கிடைக்கும் என்றால் சரிதான். இதுதான் அவர்களுக்குள் பிரச்சனை என்றால் சரிதான். முருகன், வேலு போட்டுள்ள போரில் உள்ள தண்ணீரை வக்கீல் முருகேஷ் அப்பாவிற்கு கொடுக்கவில்லை என பிரச்சனை வந்து காவல்நிலையம் வரை சென்றது என்றால் சரிதான். அதனால்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.** மேற்படி பிரச்சனை பற்றி எங்கள் குடும்பத்தில் பெரியாட்கள் பஞ்சாயத்து பேசினார்கள் அதில் நானும் இருந்தேன் என்றால் சரிதான்......."

என சாட்சியம் அளித்துள்ளார்.

54) இதிலிருந்து வாதிகளால் இவ்வழக்கு 1, 3 பிரதிவாதிகளான முருகன், வேலு போட்டுள்ள போரில் இருந்து 3வது வாதியின் தந்தைக்கு தண்ணீர் கொடுக்காததால் ஏற்பட்ட தகராறின் முன்விரோதத்தின் காரணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை வாதிகள் தரப்பு சாட்சியான வா.சா.2 மூலமாக இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

55) மேற்கண்ட பரிசீலனையில் இருந்து, இவ்வழக்கு வாதிகள் தரப்பில், பிராது 3ம் தபசில் சொத்து பொதுச் சொத்து என்பதையும், அதில் வாதிகளுக்கு உரிமை இருப்பதையும், பிரதிவாதிகள் சட்டவிரோதமாக ஆழ்துளைக் கிணறு அமைத்துள்ளனர் என்பதையும் வாதிகள் உரிய சான்றுகளால் நிரூபிக்கத் தவறியுள்ளனர்.

56) எனவே, பிராது 3ம் தபசில் சொத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக்

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:14:36 +0530

கிணற்றை அகற்றிட வாதிகள் கோரும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது அல்ல என இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்பட்டு **எழுவினா.3**–ற்கு வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**<u>57) எழுவினாக்கள்.4 மற்றும் 5</u>**

- 26.05.2014 தேதிய மேலநீலிதநல்லூர் சார்பதிவாளர் அலுவலகம் 1066/2014 எண் பதிவு ஏற்பாடு ஆவணம் சட்டப்படி செல்லாது என்பது சரியா? மேற்படி ஆவணத்தை பொறுத்து வாதிகள் கோரும் விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?

- 26.05.2014 தேதிய மேலநீலிதநல்லூர் சார்பதிவாளர் அலுவலகம் 1065/2014 எண் பதிவு ஏற்பாடு ஆவணம் சட்டப்படி செல்லாது என்பது சரியா? மேற்படி ஆவணத்தை பொறுத்து வாதிகள் கோரும் விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?

58) இவ்வழக்கு வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 ஆக 26.05.2014 தேதியிட்ட இவ்வழக்கு 1ம் பிரதிவாதியால் தனது மகனான 2வது பிரதிவாதிக்கு பிறப்பிக்கப்பட்ட ஏற்பாடு ஆவண எண்.1066/2014 மற்றும் 3ம் பிரதிவாதியால் தனது மகனான 4வது பிரதிவாதிக்கு பிறப்பிக்கப்பட்ட ஏற்பாடு ஆவண எண்.1065/2014 ஆகியவை தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேற்படி ஆவணங்கள் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.7 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களில் இவ்வழக்கு 1ம் தபசில் 2வதுஅயிட்ட சொத்து குறித்து **".......மேற்படி சர்வே 8 நம்பரில் இருக்கிற...... கிணற்றில் இருக்கிற 3HP மின் மோட்டார் பம்பு செட்டில் பாதி பங்கும்......"** என தெரிவிக்கப்பட்டுள்ளது.

59) மேற்கண்ட எழுவினாக்கள்.1 மற்றும் 2–ற்கான பரிசீலனையில் இருந்து இந்நீதிமன்றத்தால் பிராது 1ம் தபசில் 1, 2 அயிட்ட சொத்துக்களில் 1

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2026.06.12
18:14:44 +0530

மற்றும் 2 வாதிகளுக்கு சேர்ந்து 5 ல் 1 பங்கு உரிமையும், 3 ம் வாதிக்கு தனியாக 5 ல் 1 பங்கு உரிமையும் உள்ளது என முடிவு காணப்பட்டுள்ளதால், 1 வது தபசில் 2 வது அயிட்ட சொத்தான 3HP மின் மோட்டார் பம்பு செட்டில் பாதி பங்கு குறித்து ஏற்பாடு ஆவணங்கள் பிறப்பிக்க 1 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை.

60) ஆகையால், வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 (பி.வா.சா.ஆ.7 மற்றும் பி.வா.சா.ஆ.2) ஆவணங்கள் இவ்வழக்கு 1 வது தபசில் 2 வது அயிட்ட சொத்தில் வாதிகளுக்குரிய பங்குரிமையை பொறுத்தமட்டில் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல மற்றும் இல்லா நிலையது என விளம்புகை செய்யப்பட்டு, இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்பட்டு **எழுவினாக்கள்.4 மற்றும் 5**–ற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

**61) <u>எழுவினா.6</u>**

- வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?

மேற்கண்ட பரிசீலனைகளிலிருந்து, இவ்வழக்கு தரப்பினர்களால் எடுக்கப்பட்டுள்ள கட்சி மற்றும் மேலே தீர்மானிக்கப்பட்டுள்ள வழக்கெழுவினாக்கள்–1 முதல் 5–ஐ கருத்தில் கொண்டு தரப்பினர்களுக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும், தரப்பினர்கள் தங்களது செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் **எழுவினா–6** ற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

**62) இறுதியாக,**

இவ்வழக்கானது செலவுத்தொகையின்றி பகுதியாக அனுமதிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு தீர்ப்பளிக்கப்படுகிறது.

(i) பிராது 1 ம் தபசில் 1, 2 அயிட்ட சொத்துக்களில் 1 மற்றும் 2 வாதிகளுக்கு சேர்ந்து 5 ல் 1 பங்கு உரிமையும், 3 ம் வாதிக்கு தனியாக 5 ல் 1 பங்கு உரிமையும்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:14:52 +0530

உள்ளது என்றும், 1ம் தபசில் 1, 2 அயிட்ட சொத்துக்கள் குறித்து வாதிகள் கோரிய விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்றும்,

(ii) வழக்கு 2ம் தபசில் சொத்து குறித்து வாதிகளுக்கு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல என்று தள்ளுபடி செய்யப்பட்டும்,

(iii) பிராது 3ம் தபசில் சொத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணற்றை அகற்றிட வாதிகள் வழக்கில் கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்று தள்ளுபடி செய்யப்பட்டும்,

(iv) 26.05.2014 தேதியிட்ட இவ்வழக்கு 1ம் பிரதிவாதியால் 2வது பிரதிவாதிக்கும் மற்றும் 3ம் பிரதிவாதியால் 4வது பிரதிவாதிக்கும் பிறப்பிக்கப்பட்ட ஏற்பாடு ஆவண எண்கள்.1066/2014 மற்றும் 1065/2014 ஆகியவை இவ்வழக்கு 1வது தபசில் 2வது அயிட்ட சொத்தில் வாதிகளுக்குரிய பங்குரிமையை பொறுத்தமட்டில் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல மற்றும் இல்லா நிலையது என விளம்புகை செய்யப்பட்டு இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 12ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:15:00 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**1. வாதிகள் தரப்பு சாட்சிகள் :–**

1. வா.சா.1 திரு. முருகேஷ் (3ம் வாதி)
2. வா.சா.2 திரு. முத்து

**2. வாதிகள் தரப்பு சான்றவாணங்கள் :–**

| ஆவண எண். | நாள் | சான்றாவணங்கள் |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 30.08.2004 | 3ம் வாதிக்கு அவரது தகப்பனார் முத்து (எ) சப்பாணிமுத்துவினால் பிறப்பிக்கப்பட்ட ஏற்பாடு ஆவணம் – அசல் |
| வா.சா.ஆ.2 | 28.09.2015 | 3ம் வாதிக்கு அவரது தகப்பனார் முத்து (எ) சப்பாணிமுத்துவினால் பிறப்பிக்கப்பட்ட சீர்திருத்த ஏற்பாடு ஆவணம் – அசல் |
| வா.சா.ஆ.3 | 13.01.2009 | பிராது சர்வே எண்.8ல் உள்ள சொத்துக்கு 3ம் வாதி பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா எண்.1001 – கணினி நகல் |
| வா.சா.ஆ.4 | 13.01.2009 | பிராது சர்வே எண்.9ல் உள்ள சொத்துக்கு 1, 2 வாதிகளின் தகப்பனார் சங்கரன் மற்றும் 3ம் வாதி பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா எண்.856 – கணினி நகல் |
| வா.சா.ஆ.5 | 23.06.2006, 06.02.2008, 11.05.2010 | 3ம் வாதி பெயரில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீதுகள் (எண்ணம்.4) – அசல் |
| வா.சா.ஆ.6 | 20.04.2009 | 3வது வாதியால் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட 1ம் தபசில் கிணற்றிற்கு மின் இணைப்பு வேண்டி 1ம் பிரதிவாதி பெயரில் கூட்டுரிமையாளர்கள் ஒப்புதலுடன் கொடுக்கப்பட்ட விண்ணப்பம் – அசல் |
| வா.சா.ஆ.7 | 26.05.2014 | 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு பிறப்பித்த ஏற்பாடு ஆவணம் – சார்பதிவக நகல் |
| வா.சா.ஆ.8 | 26.05.2014 | 3ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு பிறப்பித்த ஏற்பாடு ஆவணம் – சார்பதிவக நகல் |
| வா.சா.ஆ.9 | 25.05.2015 | 3ம் வாதி கண்காணிப்பு பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம், திருநெல்வேலி அவர்களுக்கு |

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:15:08 +0530

| | | |
|---|---|---|
| | | அனுப்பிய புகார் மனு – அலுவலக நகல் |
| வா.சா.ஆ.10 | 23.03.1983 | சங்கரன் என்பவரின் இறப்பு சான்று – கணினி நகல் |
| வா.சா.ஆ.11 | -- | வேலு பெயரிலான பட்டாக்கள் (எண்ணம்.2) – கணினி நகல் |
| வா.சா.ஆ.12 | -- | நத்தம் பட்டாக்கள் (எண்ணம்.3) – கணினி நகல் |
| வா.சா.ஆ.13 | 14.07.1975 | பெரியான் பெயரிலான கிரைய ஆவணம் – சான்றளிக்கப்பட்ட கணினி நகல் |
| வா.சா.ஆ.14 | 03.10.1994 | சப்பாணிமுத்து, முருகன், வேலு, தவசி ஆகியோர் பெயரிலான கிரைய ஆவணம் – சான்றளிக்கப்பட்ட கணினி நகல் |
| வா.சா.ஆ.15 | -- | வரைபடம் – ஒளி நகல் |

**<u>3. 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி</u> :-**

1. பி.வா.சா.1 – திரு. முருகன் (1ம் பிரதிவாதி)

**<u>4. 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பு சான்றவாணங்கள்</u> :-**

| ஆவண எண். | நாள் | சான்றாவணங்கள் |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 02.07.2025 | 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள தபசில் சர்வே எண்.8ன் மின் இணைப்புக்கான ரசீது – கணினி நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 26.05.2014 | 3வது பிரதிவாதியால் தனது மகனான 4வது பிரதிவாதிக்கு பிறப்பிக்கப்பட்ட ஏற்பாடு ஆவணம் – அசல் |
| பி.வா.சா.ஆ.3 | 09.05.2016 | முத்து என்பவரால் 3வது பிரதிவாதிக்கு பிறப்பிக்கப்பட்ட கிரைய ஆவணம் – அசல் |
| பி.வா.சா.ஆ.4 | 18.01.1985 | தபசில் புல எண்.9ல் உள்ள சொத்துக்கான பெரியான் பெயரிலான கிரைய ஆவணம் – அசல் |
| பி.வா.சா.ஆ.5 | 20.03.1978 | வழக்கு தபசில் புல எண்.8ல் உள்ள சொத்துக்கான பெரியான் பெயரிலான கிரைய ஆவணம் – அசல் |

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:15:16 +0530

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.6 | 09.05.2016 | முத்து என்பவரால் 1 வது பிரதிவாதிக்கு பிறப்பிக்கப்பட்ட கிரைய ஆவணம் – அசல் |
| பி.வா.சா.ஆ.7 | 26.05.2014 | 1 வது பிரதிவாதியால் 2 வது பிரதிவாதிக்கு பிறப்பிக்கப்பட்ட ஏற்பாடு ஆவணம் – அசல் |
| பி.வா.சா.ஆ.8 | 05.03.2001 | 1 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு அவரது சகோதரரான சண்முகம் என்பவரால் பிறப்பிக்கப்பட்ட கிரைய ஆவணம் – அசல் |
| பி.வா.சா.ஆ.9 | 18.05.2023 | 1 வது பிரதிவாதி முருகன் பெயரிலான சிறு/குறு விவசாயி சான்றிதழ் – கணினி நகல் |
| பி.வா.சா.ஆ.10 | 08.11.2024 | 1 வது பிரதிவாதி முருகன் பெயருக்கு சின்னக்கோவிலான்குளம் கிராம VAO–ஆல் வழங்கப்பட்ட சான்றிதழ் – அசல் |
| பி.வா.சா.ஆ.11 | -- | புல எண்.9/2 க்கான 1 வது பிரதிவாதி முருகன் பெயரிலான பட்டா – கணினி நகல் |

<u>5. 2 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றவாணங்கள்</u> :– இல்லை

<u>6. நீதிமன்ற சாட்சி</u> :–

1. நீ.ம.சா.1 – திரு. புபேஷ் ராஜ்மோகன் (நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம்)

<u>7. நீதிமன்ற சான்றாவணங்கள்</u> :– இல்லை

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.12 18:15:24 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

<u>மு.மா.உ.நீ., சங்கரன்கோவில்</u>

அசல் வழக்கு எண்.368/2015

**தீர்ப்புரை** (Draft / Fair)

நாள் : 12.06.2026